
## ஞாலகுருவின் படைப்புக்கள்

# அருளுலக வாரிசுகளின் இருளகற்றும் திருவோலை



நம் நாட்டில்
மதத்தின் பெயரால் உள்ள
எல்லாவிதமான கட்சிகளும்,
சங்கங்களும், பிற அமைப்புக்களும்
மாற்று மதங்களின் வளர்ச்சிநிலைகளையும்,
ஆட்சிநிலைகளையும், ஒற்றுமைநிலைகளையும்
கண்டு பொறுமையுற்று சீற்றமுற்று
கண்மூடித்தனமான எதிர்ப்புப்
போராட்டங்களிலும், போர்களிலும்
ஈடுபட்டிருக்கின்றன. இதனால்
எக்காலத்திலும் பயன்
விளையாது!


இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,122 ஆடி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ.10/-

# <u>உள்ளுறை</u>

1. **"அருளுலக வாரிசுகளின் இருளகற்றும் திருவோலை"** - மதுரையைச் சேர்ந்த இயக்கத்தின் முழுநேர ஊழியர் ஒருவரின் குடும்பத்திற்கு குருதேவர் 30/07/1987இல் விடுத்த விரிவான அஞ்சல்.
2. **"இந்து மறுமலர்ச்சி இயக்க செயல்விளக்கக் குருவாணை"** - சேலம் மாவட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களுள் ஒருவரான மாட்டுவேலம்பட்டியைச் சேர்ந்த அடியானுக்கு குருதேவர் 10/08/1987இல் விடுத்த அஞ்சல்.
3. **"அருள்நலம் பாராட்டுத் திருவோலை"** - மணப்பாறையைச் சேர்ந்த வரதராச அடிகளாருக்கு குருதேவர் 18/08/1987இல் விடுத்த நெடிய அஞ்சல்.
4. **"தேவதேவியின் சன்னிதான சித்திபூசை முறை பற்றிய விளக்கம்"** - கடந்தப்பட்டியைச் சேர்ந்த புதிய மாணுக்கருக்கு குருதேவர் 18/08/1987இல் விடுத்த விளக்க அஞ்சல்.

# அருளுலக வாரிசுகளின் இருளகற்றும் திருவோலை

தலைமைப்பீடம்,
செம்பியம்,
30/7/87.

1) தாத்தாக்களின் ஆத்தாக்களின் அருளாலும், அம்மையப்பன் துணையாலும், விண்ணுலகத் தேவதேவியின் அருளாட்சிப் பரிந்துரையாலும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது **அருளுலக வாரிசுகளின் இருளகற்ற விடுக்கும் திருவோலை**!

2) பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் தங்களுக்குக் கிடைத்தவர்களின் தகுதிக்கேற்ப அவரவர் விருப்பத்தையும், ஆர்வத்தையும் அளந்து அறிந்து அருட்கலைஞராக உருவாக்கினர். அதனால்தான் வாழையடி வாழையென அருட்கலைஞர்கள் ஆங்காங்கே அருகம்புல் போல் முளைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இந்த அருளாளர்களில் ஆலமரம் போல் வளர்ந்தவர்கள் சிலரே என்றுதான் கூற முடியும். இருந்தபோதிலும், அந்த ஆலமரங்கள் பரந்துபட்ட நான்கு யுகங்கள் எனும் இடைவெளியில் தோன்றியும் தோன்றாதவர்களாகி விட்டார்கள். ஓகோ! என்று வெற்றிகளைப் பெற்றிருந்தும் இருந்த இடமே தெரியாமல் போனவர்களே மிகுதியாயிட்டனர்.

எனவேதான், தத்துவ நாயகங்களாக ஆச்சாரியார்களும், குருபீடங்களும், ... இலைமறை காயாகவாவது தொடர்ந்து வாழ வழிவகை செய்யப்பட்டன. ஆனால், இவர்களின் போதனைகளும், சாதனைகளும் உலகியலுக்கு உகந்தவைகளாக அல்லாமலும்,

உட்பட்டவைகளாக அல்லாமலும் மாறுபட்டு, வேறுபட்டு, முரண்பட்டுக் கிடக்கின்றன. <u>எனவேதான், 'எதனையும் மறைபொருளாகக் காத்தல் (இரகசியம், இரகசியம், இரகசியம்)' என்ற விதி கட்டாயமாக்கப் பட்டிருக்கிறது.</u>

3) அன்பு மகளே! அருட்செல்வியே! அருள்மிகு மதுரை மீனாட்சியம்மன் சன்னிதானமே! திருவாட்டி முத்தையா விசாலாட்சியே! உனது அஞ்சல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி! குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூரின் ஏற்புச் செல்வி என்ற தகுதி முழுமையாக இப்பதிலில் நிறைந்திருக்கிறது.

நீ பொறுப்போடும், பொறுமையோடும் அ.வி.தி. செயல்வீரர் சுடலைச் சன்னிதானம் பெரி.முத்தையா அவர்களின் சுற்றுப்பயணம் பற்றியும், மற்ற பணிநிலைகள் பற்றியும் அவ்வப்போது முழுமையாகத் தெரிவிப்பதாகப் பொறுப்பேற்றதற்கு எமது வாழ்த்து. இதன்படி யாம் அஞ்சல் எழுதினாலும், எழுதாவிட்டாலும் ஒவ்வொரு வாரமும் திங்கட் கிழமையில் உனது கணவரின் சுற்றுப்பயண நிலைகள் குறித்து விவரமான ஓர் அஞ்சல் தலைமைச் செயலகத்துக்குத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருக்கவும். இதிலே மிகப் பெரிய பயன்கள் விளைந்திடும்.

4) அன்பு மகளே! குருபாரம்பரிய மரபுப்படி எல்லா விதமான உறுதிமொழிகளையும் வழங்கித் தயாரான **நம்பிக்கைக்குரிய** வீராங்கனைகளுள் நீயும் ஒருத்தி என்பதை நினைவில் நிறுத்திக் கொள். நம் நாட்டில் தோன்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும் எவ்வளவோ முயன்றும் கூட அருளுலகில் தங்களைப் போன்ற வாரிசுகளை உருவாக்க முடியாமல் போய் விட்டார்கள். ஆனால், எண்ணற்ற ஆதரவாளர்களையும், அரிய சாதனைகளையும், போதனைகளையும் உருவாக்கத்தான் செய்தார்கள். இருந்தும் மேலை நாட்டார் தங்களுக்குக் கிடைத்த ஒரே ஒரு

ஏசுவையும், முகமது நபியையும் எந்த அளவு சீராட்டிப் பாராட்டிப் போற்றி, ஒற்றுமையுடன் பேணி, வழிபட்டுத் தங்களின் வீட்டையும், நாட்டையும் உரிமையும், பெருமையும், உயிர்த் துடிப்பும் உடையதாக்கிக் கொண்டார்களோ; அதைப்போல நம்மவர்கள் ஒரே ஒரு நாயனுரையோ, ஆழ்வாரையோ கூடப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

எனவேதான், உலகாண்ட இனத்தவர்; இன்றைக்கு நாடிழந்து, மொழியிழந்து, இன உணர்விழந்து, தன்மானமிழந்து, தன்னம்பிக்கையிழந்து, அடிமையாக வாழ நேரிட்டு விட்டது. அதாவது, தமிழர்களுக்குத் தங்களுடைய இனத்தில் தோன்றிய தலைவர்களையும், தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும் ஏற்றுப் போற்றிப் பேணிப் பயன்படுத்திடும் பண்பே இல்லாமல் போய்விட்டது.

இன்னும் சொல்லப்போனுல், தமிழர்கள் அன்னியமானவைகளையே தங்கள் வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் நம்பி ஏற்றுப் போற்றுபவர்களாகவே இருக்கிருர்கள். இதில் எம் காலத்திலாவது மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியேயாக வேண்டும். இதற்காக தத்துவ வித்துக்களாகவும், செயல்சித்தாந்த நாற்றுக்களாகவும் கணிசமான அளவினரைத் தயாரித்தே ஆக வேண்டும் என்ற பெருமுயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறோம் யாம். இதற்காக இரவுபகலாக அயர்வின்றி உழைத்து வருகிறோம் யாம். பேருந்துகளிலும், இருப்புப் பாதை வண்டிகளிலும் செல்லும் போது கூட எழுதுகிறோம், படிக்கிறோம். யாம் களைப்பால் கண்ணயர்ந்தால் கூட அருகிலிருப்பவரை படிக்கச் சொல்லியும், எழுதச் சொல்லியும் செயல்படுத்தியபடியேதான் எம்மை மறந்து அயர்ந்து உறங்குகிறோம். இப்படி யாம் செயல்படுவதால்தான் நம்மவர்கள் பல நூறுகளின் பல மடங்குகளாகியும் கூட அனைவரோடும் அஞ்சல் தொடர்பும், நேரடித் தொடர்பும் வைத்திருக்கிறோம்.

இவற்றை யாம் இங்கு நினைவுபடுத்துவதற்குக் காரணம் நீ வாரத்துக்கு ஒருமுறையாவது கார்த்தியாயினி வீட்டிற்குச் சென்று

ஒரு சாம நேரம் (2½ மணி நேரம்) பூசைகளைச் செய்து அருளுலக பயிற்சிகளையும், முயற்சிகளையும், கருத்து விளக்கங்களையும் பெற்று வர வேண்டும்.

முடிந்தால் கலசம் தயாரித்து அங்கு பூசையில் வைத்து வீடு கொண்டுவந்து; வீட்டில் பூசைசெய்து கலசத் தேங்காயை உடைத்தும், கலசநீரை வீடு முழுவதும் தெளித்தும் பூசையை நிறைவு செய்து கொள்ளுங்கள்; ஒவ்வொரு முறையும் கலசம், தேங்காய், மாவிலை அல்லது அரச இலை அல்லது வேப்பிலை அல்லது இவைகளில் கிடைக்கின்ற இலைகளை எடுத்துச் சென்று கார்த்தியாயினி வீட்டில் வைத்து மஞ்சள் நீர் ஊற்றி இலைகளையும், தேங்காயும் வைத்து (கலசத்தில் நூல் சுற்றி) கலசம் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதாவது, கார்த்தியாயினி வீட்டில்தான் கலசம் தயாரிக்க வேண்டும். கூடுமானவரை வாராவாரம் கார்த்தியாயினி வீட்டிலிருந்து கலசம் தயாரித்துக் கொண்டு வரவும். எப்படியும் 15 நாட்களுக்கு மேலே போகாமல் கொண்டுவந்த கலசத்தை என்றைக்கு கார்த்தியாயினி வீட்டிற்குப் போக முடியுமோ அன்றைக்கே நிறைவுப் பூசை செய்து தேங்காயை உடைத்து, கலசநீரை வீடுமுழுவதும் தெளித்து விட வேண்டும்.

இப்படிச் செயல்படுவதன் மூலம் 500 கோடி ஆண்டுகளாக இருந்து வரும் அருளுலகப் பாரம்பரிய உரிமைகளிலும், பெருமைகளிலும் மிகச் சிறந்த பங்கினைப் பெற முடியும் உன்னால். உன் போன்று மாவட்டத்துக்குச் சிலராவது தயாராகி விட்டால்தான் அருளாட்சி அமைப்புப் பணியில் வளமும், வலிவும், பொலிவும் மிகுந்த வெற்றிகள் மிகுந்திடும்.

5) அன்பு மகளே! நம் நாட்டில் மதத்தின் பெயரால் உள்ள எல்லாவிதமான கட்சிகளும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும், மன்றங்களும், கழகங்களும், இன்னோரன்ன பிற அமைப்புக்களும்

மாற்று மதங்களின் வளர்ச்சிநிலைகளையும், ஆட்சிநிலைகளையும், ஒற்றுமைநிலைகளையும் கண்டு பொருமையுற்று, சீற்றமுற்று கண்மூடித்தனமான எதிர்ப்புப் போராட்டங்களிலும், போர்களிலும் ஈடுபட்டிருக்கின்றன. இதனால் எக்காலத்திலும் பயன் விளையாது! பயன் விளையாது! பயன் விளையாது! பயன் விளையவே விளையாது! இவர்களெல்லாம் பொறுமையோடும், பொறுப்போடும் மேற்கண்ட மதங்களின் வரலாறுகளை உற்று நோக்கி ஆராய்ந்து உணர முற்படுவார்களேயானால்; அப்பொழுதுதான் இவர்களுக்குத் தங்களுடைய செயல்கள் அனைத்தும் தவறானவையே என்று புரிந்திடும்.

இன்னும் சொல்லப்போனால், இந்துமதத்தின் பேரால் புதிது புதிதாக பல நிறுவனங்களும், நிர்வாகங்களும் தோன்றி இந்த நாட்டில் வளமான ஆட்சிநிலையில் இருக்கின்ற அன்னிய மதங்களை எதிர்க்கின்ற காரணத்தினால்தான் அந்த அன்னிய மதங்கள் புத்துணர்ச்சி பெற்று வெகுவேகமாக வளர்ச்சி நிலைகளையும், ஆட்சிநிலைகளையும் எல்லாத் துறைகளிலும் கைப்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள் என்ற பேருண்மையினை யாம், ஏறத்தாழ மேற்படி அனைத்து வகையான இந்துமத அமைப்புக்களின் தொண்டர்களிடமும், தலைவர்களிடமும் அஞ்சல் வழியாகவும், பதிலிகள் மூலமாகவும், நேரிலுமாக எடுத்து விளக்கிக் கூறிக் கூறிச் செயல்பட்டும் எள்முனையளவு கூடப் பயன் விளையவில்லை! விளையவில்லை!! விளையவில்லை!!! விளையவேயில்லை!!!!

எனவேதான், இந்துமதத் தத்துவ வித்துக்களையும், சித்தாந்த நாற்றுக்களையும் தொடர்ந்து தயாரிக்கக் கூடிய விதைப் பண்ணைகளாகவும், நாற்றுப் பண்ணைகளாகவுமே சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் உருவாக்குகிறோம். எனவேதான், யாம், <u>எம்மால் உருவாக்கப்படும் கையெழுத்துப் பிறதிகளையும், அச்சிட்ட அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், நூல்களையும் மேற்படி நமது அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் முறையாகப் படித்து நிறைந்த புலமையுடையவர்களாக ஆகிடல் வேண்டும்</u> என்ற

திட்டத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அதாவது நம்மவர்கள் நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் உரிய வரலாற்றுச் சான்றுகளோடும், இலக்கிய ஊன்றுகளோடும் நன்கு தெரிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பிச் செயல்படும் தத்துவவாதிகளாக மாறிட வேண்டும், மாறிட வேண்டும், மாறிட வேண்டும் என்பதே எமது நோக்கமும், போக்குமாகும்.

இல்லாவிட்டால் நம்மவர்கள் மந்திரவாதிகளோடு மந்திரவாதிகளாகவும்; குறிகாரர்களோடு குறிகாரர்களாகவும்; வெறும் சடங்குகளை மட்டும் செய்யக்கூடிய பூசாறிகளோடு பூசாறிகளாகவும்; வளர்ந்து வரும் அறிவியல் போக்குடைய சமுதாயத்தோடும், அரசியலோடும் ஒத்துப் போகத் தெரியாத பழமைவாதிகளோடு பழமைவாதிகளாகவும்; கண்மூடித்தனமான மதவெறி பிடித்த மூடநம்பிக்கைக் காரர்களோடு மூடநம்பிக்கைக் காரர்களாகவுமே கருதப்பட்டு விடுவோம், கருதப்பட்டு விடுவோம், கருதப்பட்டு விடுவோம். அதனால், நமது உயரிய பயிற்சிகளும், முயற்சிகளும், முதிர்ச்சி மிக்க தேர்ச்சிகளும், கொள்கைகளும், குறிக்கோள்களும், செயல்திட்டங்களும் உரிய காலத்தில் பெற வேண்டிய வெற்றிகளைப் பெற முடியாமல் போய்விடும், போய்விடும், போய்விடும்.

எனவே, அன்பு மகளே! வீராங்கனையே! நீ வெற்றித் திருமகளாக விளங்கினால்தான் குறைந்தது பாண்டியநாடு முழுவதுமாவது தயாராகிடும். மேலும் சுடலைச் சன்னிதானம் மேற்கொள்ளக் கூடிய அ.வி.தி. பயணங்களில் மகளே! நீயும் கூடுமானவரை பங்கு பெற்றால் தமிழகம் முழுவதும் குறிப்பிடத்தக்க விழிச்சியை, எழிச்சியைக் கிளர்ச்சிமிகு வளர்ச்சி நிலை பெறச் செய்திடும். இப்படித் தமிழகத்தைத் தயாரிப்பதற்கு யாம் எம்மால் இயன்ற அளவு, உன்னைப் போன்ற தனிமனிதர்களைத்தான் நம்பியிருக்கிறோம். ஏனெனில், தமிழின் பெயராலும், தமிழினத்தின் பெயராலும், தமிழ்நாட்டின் பெயராலும், தமிழர் மதத்தின் பெயராலும் செல்வாக்கும், செல்வ வளமும் மிக்க பெரிய மனிதர்களும்,

பெரிய பெரிய நிறுவனங்களும், சிறிய சிறிய நிறுவனங்களும் தேவையான அளவுக்கு மேலேயே நமது தமிழகத்தில் இருந்தும் கூட எமக்கு உதவிட முன்வருவார் அதிகம் இல்லை, அதிகம் இல்லை, அதிகம் இல்லை. அதாவது, மேற்படி நிறுவனங்களில் பெரும்பாலானவை குறுகிய நோக்கும் போக்கும், சுயநலமும், பேராசையும், குறிப்பிட்ட எல்லைக்குள்ளே செயல்படும் தன்மையும் உடையனவாகவே இருக்கின்றன.

இவற்றைப் போலத்தான் நமது தாயகத்தில் உள்ள பதிப்பகங்களும், நாளேடுகளும், வார இதழ்களும், மாதமலர்களும் மெய்யான வாய்மை மிகுந்த, தூய்மைநிறை தமிழ்மொழிப் பற்றோ, தமிழினப் பற்றோ, தமிழ்நாட்டுப் பற்றோ இல்லாமல் பொருளீட்டுகின்ற வணிக நோக்கத்திலேயே செயல்படுகின்ற தன்மையைத்தான் பெரும்பாலும் பெற்றிருக்கின்றன, பெற்றிருக்கின்றன, பெற்றிருக்கின்றன. எனவேதான், என் முன்னோர்களும், நானும் தனிமனிதர்களாகவே எங்கள் காலத்தை இலைமறை காயாகவே கழிக்க நேரிடுகின்றது. இதற்கென்ன செய்வது?

அதாவது, நமது நாட்டு நடப்பில் உள்ள பெரும்பாலான தலைவர்களும், நமது ஏட்டுலகில் உள்ள பெரும்பாலான எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் தங்களை அறியாமலேயே தமிழ்மொழி நலத்திற்கும், தமிழின நலத்திற்கும், தமிழ்நாட்டு நலத்திற்கும், தமிழ் மத நலத்திற்கும் எவ்வித நன்மையும் செய்யாதவர்களாகவும்; எதிர்பாராத சந்தர்ப்பங்களில் கேடுகளையும், துரோகங்களையும், விரோதங்களையும் செய்பவர்களாகவும் வாழுகின்றார்கள். இதற்கென்ன செய்வது? என்ன செய்வது? என்ன செய்வது?

இன்னும் சொல்லப் போனால்; நமது தாயக மக்களில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு மேல் தாங்கள் எப்படி வாழ்கிறோம்? என்று எண்ணிப் பார்க்காமல் நமக்கு அன்னியமானவைகளுக்கும், எதிரியானவைகளுக்கும்,

பகையானவைகளுக்கும், துரோகமானவைகளுக்கும், விரோதியானவைகளுக்கும் துணைச் சத்திகளாகவும், காப்புச் சத்திகளாகவும், போர் ஆயுதங்களாகவுமே பயன்பட்டிடுகிறார்கள், பயன்பட்டிடுகிறார்கள், பயன்பட்டிடுகிறார்கள்.

எனவே, இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அமைதியாக அன்புவழியில் முறையான விளக்கங்களை அநுபவப்பூர்வமாக வழங்கிட்டால் அவர்கள் அனைவரும் திருந்திடுவார்கள்! திருந்திடுவார்கள்! திருந்திடுவார்கள்! அப்படி ஆடம்பரமும், ஆரவாரமுமின்றி, அடக்கமான அமைதிமிகுந்த அணுகுமுறைகளின் மூலம்;

'தமிழர்களைத் தமிழர்களாக்கிடும் பணி',
'இந்துக்களை இந்துக்களாக்கும் பணி',
'தமிழர்களைத் தாய்மொழிப் பற்று உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களை இனப்பற்று உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களை இன ஒற்றுமை உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களைத் தன்மான உணர்வு உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களை விடுதலையுணர்வு உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களை உரிமையுணர்வு உடையவர்களாக்கும் பணி',
'தமிழர்களைப் பண்பாட்டுப் பெருமையுணர்வு உடையவர்களாக்கும் பணி',

.... நன்கு திட்டமிடப்பட்டு ஆரவாரமின்றி, அன்பு வழியிலும், அற வழியிலும், அருள் வழியிலும், அறிவு வழியிலும் அமைதியாகத் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும், நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும், நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். அதற்கு மகளிர் பேரணி சீரணியாக அமைக்கப்பட்டாக வேண்டும். அதற்கு அருட்சத்திகளை கணிசமான அளவாவது எப்படியாவது அருளுலகப் பயிற்சிகளின் மூலமும், முயற்சிகளின் மூலமும் பெற்றுத் தேற வேண்டும், தேற வேண்டும், தேற வேண்டும்.

6) அன்பு மகளே! நமது இந்துமதத்தில் மட்டும்தான் இன்றைக்கு மதக் கல்வி (Religious Education) இல்லை. மதக் கல்விக்கென்று

தனியாக நிறுவனங்கள் (Institutions) இல்லை. மதத்தைப் பற்றி நன்கு தெரிந்து அதைக் கற்றுக் கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் இல்லை. மதத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் மத உணர்வோடு பரப்பும் போதகர்கள் இல்லை. மதத்தின் கலைகளைப் பயிற்சி செய்து தேர்ச்சி பெறுவதற்கு வழிகாட்டக் கூடிய சாதனையாளர்கள் அதிகம் இல்லை. மதத்துக்காகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் துறவிகளையும், இல்லறத்தார்களையும் தீரர்களாகவும், வீரர்களாகவும், தியாகிகளாகவும் உருவாக்குவதற்கு; யோகாசன ஓகாசனக் கலைகளையும், சேவலோன் கலைகளையும் கற்றுக் கொடுக்கும் வசதி வாய்ப்புக்கள் ஏறத்தாழ நம் நாட்டில் இல்லவே இல்லை.....

இவற்றையெல்லாம் எண்ணித்தான் நமது அருளுலகப் பெரியவர்கள் சமாது ஆகியிருக்கக் கூடிய இடங்களில் எல்லாம் (குருத்துவாரங்கள்) குருபீடங்கள் அமைத்து மேற்படி மதமறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும் தேவையான எல்லாவகையான செயல்திட்டங்களையும் செயலாக்கிடும் முயற்சியில்தான் கடந்த இருநூறு முந்நூறு ஆண்டுகளாக எமது முன்னோர்கள் முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், குறிப்பிடத் தக்க எந்தவொரு வெற்றியும் ஏற்படவில்லை இன்றுவரை. எனவேதான் யாம், எள்முனையளவு கூட அவசரமின்றி எம்மால் முடிந்தவரை கூற வேண்டிய செய்திகளையும், கருத்துக்களையும் நாட்டில் எடுத்துக் கூறியும், ஏட்டில் எழுதியும் வருகிறோம்.

இப்படி எம்மைப்போல் அனைத்தையும் வெளிப்படையாக ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தவும், செயலாக்கவும் முற்பட்டவர்கள் மிகச் சிலரே. அவர்களிலும் தங்களிடம் வருபவர்கள் அனைவரையும் ஏற்றுக் கொண்டவர்கள் சிலரே. எனவேதான், அன்பு மகளே! உன்னைப் போல் படித்தவர்கள் எம் காலத்திலாவது ‘இந்துமத விடுதலை இயக்கம்’, ‘தமிழ்மொழி விடுதலை இயக்கம்’, ‘தமிழ் இன விடுதலை இயக்கம்’, ‘தமிழ்ப் பண்பாட்டு விடுதலை இயக்கம்’ எனும் நான்கும் தமிழர்களின் நலம் காக்கும் கோட்டையரணாக, நான்கு

மதிற்சுவராக, நான் மறையாக, நான் முறையாக, நான் நெறியாக, நான் வேதமாக செயலாகிடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.

7) அன்பு மகளே! பல்வேறு அலுவல்களுக்கிடையில் இந்த நெடிய அஞ்சல் தங்களுக்கு எழுதியிருக்கிறோம் யாம். எனவே, விரைந்து இதற்கு சில பேனா நகல்களும், பல கார்பன் நகலும் எடுத்தனுப்புக. மதுரை வட்டாரத்தார்களே இதற்கு நகல் எடுத்து நாடெங்கும் அனுப்பும் பணியை மதுரை வட்டாரத்தார்கள் ஏற்றுக் கொள்ளச் சொல்லுங்கள். நம்மவர்கள் வெறும் சடங்கியல் வாதிகளாக மட்டும் வாழாமல்; நமது தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், செயல்திட்டங்களையும், வரலாறுகளையும், இலக்கியங்களையும் நன்கு வளமாகத் தெரிந்து அழகாகப் பரப்புகிறவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் அன்னியர்களிடம் அடிமைப்பட்டுக் கூலியாகவும், போலியாகவும் வாழுகின்ற வாழ்க்கையைப் பெரிதும் விரும்பியிருக்கின்ற இன்றைய மனநிலையினை மாற்றியேயாக வேண்டும். இந்த அறிவிப்போடு இந்த அஞ்சலை நிறைவு செய்கிறோம் யாம். இதனைத் தாங்கள் பலமுறை படித்தும், பலருக்குப் படித்துக் காட்டவும் வேண்டும். **குருவாணை.**

**(ஒப்பம்)**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**4/8/87.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு மு.பெருமால் அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# இந்து மறுமலர்ச்சி இயக்க செயல்விளக்கக் குருவாணை

தலைமைப்பீடம்,
10/8/87.

1) நமது இயக்கம் ஒரு பண்பாட்டு விடுதலை இயக்கம் (The Liberative Party of Tamil Culture); ஒரு மொழி விடுதலை இயக்கம் (The Liberative Party of the Tamil Language); ஓர் இன விடுதலை இயக்கம் (The Liberative Party of the Tamilian Race); ஓர் இந்துமத விடுதலை இயக்கம் (The Liberative Party of the Induism); ... எனவே, நமது இயக்கத்தவர்கள் இம்மண்ணுலகில் தோன்றியுள்ள அனைத்து மானுட இனங்களும் இன உரிமைகளையும், பெருமைகளையும் பேணிக் கொள்கின்ற அளவு இன விடுதலை, மொழி விடுதலை, பண்பாட்டு விடுதலை முதலிய விடுதலைகள் எங்கும் நிலவிடும் வண்ணம்; மனித வாழ்வின் உயிர்நாடியும், உலக மதங்களின் தாயும் ஆன இந்துமதம் எல்லாநிலைகளிலும், எல்லாவகைகளிலும் விடுதலை பெற்று தூய்மையோடும், வாய்மையோடும் வாழ்ந்திடுவதற்காகப் பாடுபட வேண்டும்.

எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைப் பொறுத்தவரை இதனுடைய வீரர்கள் நிறைவான ஏட்டறிவையும், முறையான பட்டறிவையும் குருவழியாக நேரிலும், அஞ்சல் வழியாகவும் பெற்றிடல் வேண்டும் என்ற செயல்திட்டம் வலியுறுத்தப்படுகிறது, வலியுறுத்தப் படுகிறது, வலியுறுத்தப்படுகிறது.

2) சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை இப்பொழுதுதான் வளர்ச்சி நிலை வளமாகி வருகிறது என்பதால்; இம் மாவட்டத்தைச் சேர்ந்த இ.ம.இ. தலைவர்களும், அ.வி.தி. தலைவர்களும், செயல் ஊக்கமுடைய தொண்டர்களும் தங்களுக்கிடையில் எவ்விதமான உயர்ந்தவர், தாழ்ந்தவர்; இயக்கத்தில் சேர்ந்தவர்களுள் மூத்தவர் இளையவர்; அருளாற்றலில் சித்தி பெற்றவர், சித்தி பெருதவர்; குருதேவருடன் நேரடித் தொடர்பு அதிகமாக உடையவர், குறைவாக உடையவர், ... என்ற வேறுபாடுகளே இல்லாமல், அனைவரும் சமத்துவ உணர்வோடும், உடன்பிறப்புப் பாச உணர்வோடும், ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளும் நட்புணர்வு மிக்க கூட்டுறவுச் சிந்தையோடும் கலந்து பழகி வாழ வேண்டும், வாழ வேண்டும், வாழ வேண்டும். இல்லாவிட்டால் எத்தகைய பேராற்றல் மிக்கவர்கள் எண்ணற்றோர் தோன்றி இயக்கக் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் விளக்கியுரைத்து இயக்க வளவளர்ச்சிப் பணியில் ஈடுபட்டாலும் சரி; எதிர்பார்க்கின்ற அளவிற்கு இயக்கத்தை வளர்க்க முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!!!!

எனவே, அன்புகூர்ந்து நமது கொள்கை வீரர்கள் அனைவரும் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களையும், வறுமை வெறுமைகளையும், வெற்றி தோல்விகளையும், புகழ் இகழ் நிலைகளையும், வலிவு நலிவுகளையும், ... உள்ளடக்கிக் கொண்டு பிறரிடம் பணிவோடும், கனிவோடும், துணிவோடும் கலந்து பழகி நமது இயக்க தத்துவ வளர்ச்சிக்கும், சித்தாந்த வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும், பாடுபட வேண்டும், பாடுபட வேண்டும், பாடுபட்டேயாக வேண்டும் என்று அருளாட்சி நாயகமாகிய யாம் உங்களனைவருக்கும் **அறிவிப்பு அழைப்பு வேண்டுகோள்** விடுத்துக் கொள்கின்றோம்.

3) சேலம் மாவட்டத்தின் இ.ம.இ.யின் தலைவர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய மாட்டுவேலம்பட்டி குழந்தைவேலு அவர்களுக்கு விடுக்கப்படும் **குருவாணை** இது. இதுவே அவர் இயக்கத்தில் சட்டப்பூர்வமாக சேலம் மாவட்டத்தில் இ.ம.இ., அ.வி.தி. கிளைகளைத் துவக்கிடவும்; ஆங்காங்கே அருளை அநுபவப் பொருளாக வழங்க அ.வி.தி. நிலையங்களையும், பிற புத்துயிர்ப்புப் பணிகளையும் திட்டமிட்டு விரைந்து செயல்படுத்தவும் உரிமை வழங்கும் **குருவாணை**யாகும்.

இதனையே அனைவரிடமும் காட்டவும். தாங்கள் விரும்புகின்றபடி செயல்திட்டங்கள் உருவாக்கிக் கொள்ள உடனுக்குடன் விரிவான அஞ்சல்களை தலைமைப்பீடத்திற்கு அனுப்பி தேவையான ஒப்புதல்களையும், பரிந்துரைகளையும் பெறலாம். நேரில் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். அருட்கணிப்புக்காகவோ, மந்திரவாதி பாதிப்பிற்காகவோ, நோய்நிலைக்காகவோ யாரையும் அழைத்து வரலாம்.

தங்களுடைய முயற்சிகளும், உழைப்பும் ஏற்றுப் போற்றப்படும். பெரிதும் மதிக்கப்படும். அரசியல் வாழ்வில் ஏற்பட்டது போல் எள்முனையளவு கூட ஏமாற்றம் ஏற்படாது. சேலம் மாவட்டப் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. உடன் பதில் அனுப்புக.

**குறிப்பு:-** இதே அஞ்சல் கோவை பழ.கோபால், தஞ்சை A.இராமர், காரைக்குடி இராமானுசதாசு, நெல்லியான், திருநெல்வேலி வைத்தியலிங்கம், திருச்சி செயபால், அண்ணா மாவட்டம் சுமதி அருணாசலம் ஆகியோருக்கு மேற்கூறியபடி அவரவர்கள் அவரவர் வட்டாரத்தின் பொறுப்பேற்றுச் செயல்பட ஒப்புதலும், பரிந்துரையும் வழங்கப்படுகிறது.

இ.ம.இ. உறுப்பினர் சந்தா (மாதம்) ரூ.5/-.

அ.வி.தி. உறுப்பினர் சந்தா (மாதம்) ரூ.1/-.

ஒரே நபர் இரண்டு அமைப்பிலும் இருக்கலாம்.

**அனைவரும் தங்களுக்குத் துணைபுரிய ஆணையிதுவே - குருதேவர்.**

**பல மாவட்டத்தாரையும் துணைக்கு அழைத்துக் கொள்க! இ.ம.இ.; அ.வி.தி. உறுப்பினர்களும், கிளைகளும் அமைத்திடுக!**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இறுதி வரிகள் குருதேவரால் எழுதப்பட்டவையாக இருந்தது.//**

"நண்ப! பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் வாழ்வதற்கென்று குறிப்பிட்ட குகையோ, கூடோ, புதரோ, காடோ, ... இருக்கின்றன. அதுபோல, ஆறறிவு படைத்த மனிதனுக்கு இனவுணர்வு, மொழியுணர்வு, நாட்டுணர்வு என்ற முக்கோணக் கோட்டை வலுவாக உள்ள வீடும், வீடு சேர்ந்த நாடும் இருப்பதுதான் உலக வழக்கு. ஆனால், தமிழனுக்கு மட்டும் இது பொருந்துவதாக இல்லை. ஆறேழு கோடி மக்கள் உள்ள தமிழினத்துக்கு மட்டும் நாடில்லை, நாடு சார்ந்த மொழியுரிமை இல்லை, இன உரிமை இல்லை. இதுபற்றி அவர்களில் பெரும்பாலானவர்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை, எண்ணிப் பார்ப்பதேயில்லை, எண்ணிப் பார்ப்பதேயில்லை; எண்ணிப் பார்க்க முற்படுகின்ற சிறுசிறு கூட்டத்தார்களும் அவ்வப்போது தோன்றிடக் கூடிய தன்னல வெறிபிடித்த, தத்துவ அறிவற்ற, நல்ல பாரம்பரிய உணர்வற்ற, மெய்யான நாட்டுப்பற்றோ, மொழிப்பற்றோ அற்ற, ... இழிந்தவர்களாக இருந்திடுகின்றார்கள். ... ... ..."

# அருள்நலம் பாராட்டுத் திருவோலை

தலைமைப்பீடம்,
18/8/87.

குவலய குருபீடம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், இந்துமத ஆச்சாறிய பீடம், தமிழின ஆச்சாரியார், அருளாட்சி நாயகம், ஞாலகுரு சித்தர் கருவூரர் விடுக்கும் **அருள்நலம் பாராட்டுத் திருவோலை**.

1) அனைத்தும் அருளுலக பொருளுலக இருளகற்றுவதற்காக தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளாணைகளாலும், அம்மையப்பன் துணையாலுமே நிகழுகின்றன என்ற தத்துவத்தின் செயல்நிலை விளக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கம். மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் சித்தாந்தத்தின் செயல்நிலை விளக்கமே அருட்பணி விரிவாக்கத் திட்டம். எனவே, 'தனிமரம் தோப்பாகாது' என்ற தத்துவத்தின்படி அனைத்து வகை மதங்களிலும் உள்ள அருளாளர்களை ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்தி, ஒருமைப்பாடு பெறச் செய்து அருளாட்சி அமைக்க வேண்டும் என்ற நோக்கிலும், போக்கிலும் செயல்படுகிறோம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம். தாங்கள் (இராசகுரு) அரசகுரு R.வரதராச அடிகளார் (சுவாமிஜி) என்பவர் D.பொருவாய்-621308, பாலக்குறிச்சி P.O., மணப்பாறை (வழி), திருச்சி மாவட்டம் என்ற முகவரியிலிருந்து 14/8/87 தேதியிட்டு அனுப்பிய அஞ்சல் தொகுதிக்கு விடுக்கும் பதில் மடலே இது.

2) திருவருட்செல்வ! தங்களின் திருத்தோற்றத்தை கையேட்டில் அச்சிட்ட புகைப்படத்தின் மூலம் கண்டோம். இது ஒரு நல்ல ஞானதேகம். இது அருட்பயிர் விளைவிக்கக் கூடிய ஒரு வளமான நன்னிலமே. தங்களின் முற்பிறவிகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. தங்களுக்கு கருவழிச் சித்தி கிடைக்கின்றதே தவிர, குருவழிச் சித்தி கிடைக்கவில்லை. இப் பிறப்பிலும் அந்த யோகம் குறைவாகத்தான் உள்ளது. எனவே, தாங்கள் அரும்பெரும் முயற்சிகளைச் செய்து விடாப்பிடியாக தத்துவ நூல்கள் கூறுவது போல்; **“குருவருளை வேண்டுபவர் குரங்குக் குட்டி தாய்க்குரங்கை கெட்டியாகப் பிடித்துக் கொள்வது போல் குருவைப் பற்றிக் கொண்டு வாழ வேண்டும்”. பரமான்மாவிற்குள் சீவான்மா இருப்பது போல்; குருவுக்குள் அருள் வேண்டுபவர் இரண்டறக் கலத்தல் வேண்டும். அதன் முதிர்ச்சியாக குருதேவர் அருள் வேண்டுபவர்க்குள் இரண்டறக் கலந்திடுவார்**.

3) அருளார்வமிக்க இளம் அருட்கலைஞரே! தாங்கள் அரிய பெரிய சாதனைகளைச் சாதிக்கலாம். அதற்குரிய போதனைகள் உண்டு; ஆனால், சோதனைகள் கடுமையாக இருக்கும். எனவே, உங்களுக்கு வேதனையைச் சமாளிக்கும் நெஞ்ச வலிமையும், சிந்தை வளமும், அறிவுத் தெளிவும், அடங்காத அருளார்வமும் உண்டா? உண்டா? உண்டா? என்பதை எண்ணித் துணிக. அன்புகூர்ந்து துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்கு.

4) தங்களுக்குக் கையேடு அன்பளிப்பு அளித்துள்ள அறவோர் திரு தி.த. துரைமாணிக்கம் நாட்டார், கீழத்தெரு, திருமழபாடி P.O., அரியலூர் Tk, திருச்சி Dt., பல பிறப்புக்களாக எம்மோடும், உம்மோடும் தொடர்புடையவரே. அவருக்கு எமது வாழ்த்து. அவருக்குச் செவ்வாய்ப் பாதிப்பும், சனி பாதிப்பும் உண்டு. ஏவல் பாதிப்பும் கூட உண்டு. ஆனால், குதிரை மேல் வரக்கூடிய குலதெய்வமும், நெருப்புத் தொடர்புடைய பெண் தெய்வமும், ஒரு கன்னியும்

வாழையடி வாழையாக இவர்கள் குடும்பத்தை பாதுகாக்கிறார்கள். எனவே, பாதிப்புக்களை இவர் அகற்றிக் கொண்டால் மேன்மேலும் அருட்செல்வத்தையும், பொருட்செல்வத்தையும் வளர்த்துக் கொள்ளலாம். இவர்கள் தோற்றத்தில் நன்றாக இருந்தாலும்; மனநிம்மதியோ, உடல்நலமோ இல்லாதவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனாலும், தெய்வீக உணர்வும், சொப்பன சித்தியும், வாக்குப் பலித்தலும், வருவதை முன்கூட்டியே அறியும் அருட்திறமும் இவர்கள் பரம்பரையில் ஒளிவிடக் கூடிய வாய்ப்பும் இவர்கள் குடும்பத்திற்கு உண்டு. இவர்களை அருளாட்சி நாயகம் என்ற முறையிலும், இந்துமதத் தந்தை என்ற முறையிலும் வாழ்த்துகிறோம். வளர்க! வளம்பெறுக!

5) அருள்மிகு வரதராச அடிகளார் அவர்களே! தாங்கள் சிலரின் கைரேகை, பிறப்பியல் (சாதகம்) அனுப்பி அவர்களின் அருட்கணிப்பு தேவை என்று எழுதியிருக்கிறீர்கள். யாம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாகவும், குவலய குருபீடமாகவும், அரசயோகியாகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும் இருப்பதால் இந்த ஐநூறு (500) கோடியாண்டுகளில் வேறு எந்த பீடாதிபதிக்கும், ஆச்சாரியாருக்கும், ஆச்சாறியாருக்கும், தேவர்களுக்கும், தேவகுமாரர்களுக்கும், தேவதூதர்களுக்கும், திருத்தோன்றல்களுக்கும் (அவதாரம்), அருட்சித்தியாளர்களுக்கும், ... ஏற்படாத அளவு எண்ணற்ற கடமைகளும், பணிகளும் எமக்கு இருக்கின்றன.

இவற்றிற்கு மேலாக பொருளுலக இயலில் யாம் ஏற்றிருக்கும் ஆசிரியப் பணி, எமக்கு அன்றாடம் வரும் கணக்கற்ற அஞ்சல்களுக்கு பதில் அனுப்ப வேண்டிய கடமை, அன்றாடம் எம்மைக் காண வருகின்ற புதியவர்களுடன் அவர் திருப்திக்காக சிறிது நேரமாவது அவர்களோடு உரையாடும் இன்றியமையாமை; அருளுலகப் பயிற்சி பெறுவதற்கு எம்மைச் சுற்றியுள்ள இளைஞர்களுடன் யாம் செய்ய

வேண்டிய பூசை; மத உலகில் மறுமலர்ச்சிச் சிந்தனைக்காக யாம் வெளியிட வேண்டிய செய்திகள், இலக்கியங்கள், கருத்துக்கள்; எம்முடைய தாய்மொழி விடுதலைக்காகவும், இன விடுதலைக்காகவும், பண்பாட்டு விடுதலைக்காகவும், மத விடுதலைக்காகவும்... கருவாகி, உருவாகி வரும் விடுதலைச் சிங்கங்களுக்கு அவ்வப்போதாவது தேவையான பொருளுலக உதவிகளையும், அருளுலக உதவிகளையும் வழங்கும் பொறுப்பு; ... முதலியவைகள் எமக்கென ஓய்வெடுக்கவோ, உறங்கவோ கூடச் செய்ய முடியாமல் செய்து விடுகின்றன.

யாம் இருப்புப் பாதை வண்டிகளிலும், பேருந்துகளிலும் பயணம் செய்யும் போது கூட பக்கத்தில் ஆட்களை வைத்துக் கொண்டு எழுதியும், படித்தும் செயல்படுகிறோம். உறக்கம் வரும்வரை எமது நேரம் வீணாகிவிடக் கூடாது என்பதற்காக ஒலிப்பதிவுக் கருவி (Tape Recorder) கையில் வைத்துக் கொண்டு எமது உணர்வோட்டங்களையும், எண்ண ஓட்டங்களையும், சிந்தனை ஓட்டங்களையும் கூட வெளிப்படுத்தி; யாம் எம்மை மறந்து உறங்கும் வரை பதிவு செய்கிறோம். இப்படியெல்லாம் யாம் ஓய்வின்றி இருக்கின்ற நேரத்தில் உங்களுக்கு நெடிய அஞ்சல் எழுதுகிறோம் என்றால், யாம் உங்களை மதிக்கிறோம், விரும்புகிறோம் என்பதைப் புரிந்து கொள்க.

6) பேரார்வமுடைய அடிகளாரே! தாங்கள் நம்பிக்கையோடு அனுப்பி வைத்திருக்கும் கைரேகைகளையும், (சாதகம்) பிறப்பியல்களையும் கணிக்க இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தாங்கள் விரும்பினால் எம்முடைய சட்டதிட்ட முறைப்படி, எம்முடைய அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர், திருமந்திற ஓலைநாயகம், பரமாச்சாரியார் வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களை (C/O காதி வசுத்திராலயம், கொட்டாம்பட்டி P.O., மதுரை Dt-625108) அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ சந்தித்து

உங்களுடைய ஊரில் சிலருக்கு அருட்கணிப்பு கணிக்க வேண்டுமென்பதைத் தெரிவியுங்கள்.

முடிந்தால் அவரே சில சன்னிதானங்களுடன் உங்கள் ஊருக்கு வருவார் அல்லது சில சன்னிதானங்களை மட்டும் அனுப்பி வைப்பார். முன்கூட்டியே பயணச்செலவும், படிச்செலவும் அனுப்பி விடவேண்டும். அதன்பிறகு அவர்கள் உங்கள் ஊருக்கு எப்போது வருகிறார்கள் என்பதையும், பூசைகளுக்கும், யாகங்களுக்கும் என்னென்ன பொருட்கள் தேவை என்பதையும் தெரிவிப்பார்கள். அவர்கள் தங்களுக்கு வந்து பூசைகளைச் செய்து, யாகம் செய்து பின்னர் உங்களுடைய கைரேகை, பிறப்பியல் (சாதகம்), வீட்டுமண், ... முதலியவற்றை எடுத்து உரிய குருகாணிக்கையைப் பெற்று உடன் அனுப்பி வைப்பார்கள்.

அருள் யோகம் அதிகம் உடையவர்களுக்கும், பொருள்வசதி இல்லாதவர்களுக்கும் கணிப்புக்கள் இலவசமாகவே வழங்கப்படும். ஏனெனில், **சித்தர்கள் அருளைப் பொருளுக்கு விற்பவர்கள் அல்லர்! அல்லர்! அல்லர்!** வருகின்ற சன்னிதானங்களே அருட்கணிப்பையும் கணித்து, பரிகாரங்களையும் கூறிவிடுவார்கள். அந்தக் கணிப்பை கைரேகை, வீட்டுமண் இவற்றுடன் அனுப்பி வைப்பார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு குருதேவர் மேலும் அருட்கணிப்பு வழங்குவார். இதனால் குருதேவரின் நேரம் வீணாகாது.

7) அடிகளாரே! அடிக்கடி எம்முடைய அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர் நெ.சேவுகன் அவர்களுடன் அஞ்சல் தொடர்பு கொள்ளுங்கள். நேரிலும் சென்று சந்தித்து கருத்து விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். எமக்கு வாரம் ஒருமுறை அஞ்சல் எழுதிடுங்கள்.

8) பெருமதிப்பிற்குரிய அடிகளாரே! எம்மிடம் (ரூ.200/-) இருநூறு ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் உள்ளன. அவற்றை வாங்கிப் படியுங்கள். முதலில் ஏட்டறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். பின்னர்

குருதேவர் தங்களுக்கு இட்டும் தொட்டும் அருள்வழங்குவார். **மெய்யான இந்துமதத்தைப்** பற்றியும் தெரிந்து கொள்ளலாம். அதன்மூலம் இந்துமதத்தைப் பற்றிய தங்களுடைய ஏட்டறிவை வளர்த்துக் கொள்ளலாம். புத்தகங்களின் இரண்டு தொகுதிகளைப் பெற்று ஒரு தொகுதியைத் தாங்கள் வைத்துக் கொண்டு மற்றொரு தொகுதியை அனைவருக்கும் படிக்கத் தாருங்கள்.

9) தங்களுக்கு எழுதப்பட்டிருக்கும் இந்த அஞ்சலின் நகலுடன் தங்களின் வேண்டுகோள் மடலை இணைத்து அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களுக்கு அனுப்பினால் உடன் அவர் தங்களுக்கு சன்னிதானங்கள் வரத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார். மேலும், இவ்வஞ்சலைப் போன்று தங்களுக்கு வரும் எமது அனைத்து அஞ்சல்களையும் தனியாக ஒரு கோப்பில் (File) போட்டுப் பாதுகாத்திடுங்கள். அனைத்து அஞ்சல்களுக்கும் இரண்டு பேறு நகலெடுத்து, ஒன்றை எமக்கும், இன்னொன்றை வீரமாகாளி சன்னிதானத்திற்கும் அனுப்பிடுங்கள்.

10) தங்களை இ.ம.இ.யின் முன்னணிச் செயல்வீரர்களுள் ஒருவராக அறிவித்துச் செயல்பட விரும்புகிறோம் யாம். ஏனெனில் தாங்கள் அருளுலகச் சத்திகளையும், சித்திகளையும் பெறமுடியும். அப்படி அருளுலக அநுபவமும், அடைவும் (The Experience and Achievement) உள்ளவர்களால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சிறப்பான பயனுடைய தொண்டுகளை ஆற்ற முடியும்.

மேலும், தாங்களும் தங்களுடைய இருப்பிடமும், வட்டாரமும் தங்களால் அருளுலகைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய பக்குவத்தைப் பெற்றிருக்கிறது என்பதை உணர்கிறோம் யாம். அதனால், தங்களுடைய இருப்பிடத்தில் ஓமகுண்டம், ஓககுண்டம், யாககுண்டம், யக்ஞகுண்டம், வேள்விக்குண்டம் என்பனவற்றுள் உரியனவற்றை ஆராய்ந்து, முறையாக நிறுவி அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையம் ஒன்றை அமைக்க

விரும்புகிறோம் யாம். இதில் தங்களுக்கு உடன்பாடு இருக்குமானால் ஒப்புதலை எமக்கும், அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயலாளர் பரமாச்சாரியார் வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்களுக்கும் உடனே தெரிவியுங்கள்.

தங்களுடைய இடத்தில் எங்களவர்கள் வந்து நெடிய பச்சை மூங்கிலிலோ அல்லது இரும்புக் குழாயிலோ, கொடிமரம் நட்டு மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றுவார்கள். தங்களுக்கும், தாங்கள் விரும்புகின்றவர்களுக்கும் குருதி வண்ணச் சிவப்புத் துணியில் 4 முழம், 6 முழம், 12 முழம் துணிகளை அருளேற்றிச் சன்னிதான உடையாக்கி அனைவருக்கும் அருட்பட்டம் தருவார்கள். இப்படி அவரவர் தரத்திற்கேற்ப அவரவர் விரும்பும் கடவுள், தெய்வம், தேவதை, ஆண்டவர், பட்டவர், இறை, ... முதலியவர்களிடம் அருள்பெறக் கூடிய (48 வகையான கடவுள்கள் உண்டு) சன்னிதானம், ஆதீனம், பண்டாரம், தம்பிரான், பீடம், மடம், அமளிகை, இருக்கை, திருவடி என்ற பட்டங்களில் உரிய அருட்பட்டங்களைப் பெறலாம். (48 வகையான அருட்பட்டங்கள் உண்டு).

இவற்றால் தாங்களும் தங்களைச் சுற்றியுள்ளோர்களும் அ.வி.தி. பணியைச் சிறப்பாகச் செய்திடலாம். அவற்றால் தாங்களும், தங்களைச் சார்ந்தவர்களும் நமது மக்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் ஏற்படும் துன்பங்களில் கணிசமானவற்றிற்கு நலம் விளைவிக்கலாம். அதுவே, மெய்யான அருட் பணியாகும், அறப் பணியாகும், மத மறுமலர்ச்சிப் பணியாகும், மத வளவளர்ச்சிப் பணியாகும். இது பற்றித் தாங்கள் தங்கள் நண்பர்களுடன் கலந்து பேசி ஒரு நல்ல முடிவிற்கு வாருங்கள். உங்களுக்கு வெற்றியுண்டாக வாழ்த்துகிறோம்.

11) நமது நாட்டில் மதத்தின் பெயரால் உள்ள கட்சிகளும், கடவுள்களும், சங்கங்களும், சபைகளும் மாற்று மதங்களைக் குறைகூறிக் குற்றம்சாட்டி வேற்றுமை வெறிகளையும், சண்டை சச்சரவுகளையும்

வளர்ப்பவைகளாகவே இருக்கின்றனவே தவிர; மதத்துறையில் ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும், அமைதியையும் விளைவிக்கிறவர்களாகவே இல்லை! இல்லை! இல்லை! இல்லவேயில்லை! கண்மூடித்தனமாக மதத்தை மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும் கூடிய மனநிலைதான் வந்து விட்டது. இன்னும் சொல்லப்போனால், “கடவுள் இல்லை! சாத்திறங்கள் அனைத்தும் பொய்! கோயில்களும், பூசைகளும் பயனற்றவை! சாமியார்கள் அனைவரும் ஏமாற்றுக்காரர்கள்! ...” என்பன போன்ற நாத்திகக் கருத்துக்களை வளவளர்ச்சி பெறச் செய்துவிட்டன.

இந்த நிலையில்தான் நமது மக்கள் அன்னிய ஆதரவு பெற்ற அன்னிய மதங்களைத் தேடி நாடிச் செல்ல ஆரம்பித்திட்டார்கள். அதனால், இந்துமதம் பல்வேறு நலிவு மெலிவுகளையும், இழப்புக்களையும் பெற்று விட்டது. இவற்றை யெல்லாம் சரிக்கட்டுவதற்காகத்தான் தங்களைப் போன்ற அருளுலக ஆர்வலர்களை, செல்வர்களை, ஆற்றலாளர்களை ஒன்றுதிரட்டும் மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ளோம் யாம். எமது வெற்றியே நமது வருங்காலச் சந்ததியின் வாழ்வியலை நிர்ணயிக்கும்.

**அன்பு**

**குவலய குருபீடம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**<u>நகலெடுத்தவர்:-</u>**

க.இராசேந்திரன், 64வகை அனைத்து கபாலீசுவரர் சன்னிதானம், 15/1 பள்ளிக்கூடச் சாலை, பெரம்பூர்.

**<u>குறிப்பு:-</u>**

நண்பர் திரு வெ.செகதீசன் அவர்களின் கவனத்திற்கு எழுதுவது யாதெனில் தாங்கள் முடிந்த அளவு பேறு நகல்கள் அனுப்புங்கள்.

மொத்தமாகத்தான் அனுப்ப வேண்டும் என்று நினைக்க வேண்டாம். எழுத எழுத அனுப்பி வைத்திடுங்கள். மேலும், இந்நகலில் குறிப்பிட்டுள்ள நண்பர் அவர்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தங்களுடைய வாழ்த்துக்களையும், கருத்துக்களையும் எடுத்து எழுதி கடிதத் தொடர்பு ஏற்படுத்திடுங்கள். மேலும், அவருடைய விவரங்கள் தெரிந்து கொண்டு தலைமைப்பீடம் தொடர்பு கொள்ளுங்கள்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு க.இராசேந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

இந்துமதம் என்றால் பதினெண்சித்தர்கள் கண்டுபிடித்த சமூக விஞ்ஞானம் என்றே பொருள்படும். இந்தச் சமூக விஞ்ஞானத்திற்கு உட்பட்டதுதான் அரசியல். எனவே, பதினெண்சித்தர்களின் தத்துவப்படி அரசியலுக்கு அடங்கியதாக இந்துமதம் இருக்க முடியாது. இந்துமதத்திற்கு அடங்கியதாகத்தான் அரசியல் இருக்க முடியும். அதாவது, **பதினெண்சித்தர்களின் சீவநெறியான சித்தர் நெறி எனும் இந்துமதத்தின்படி, 'சமூக விஞ்ஞானமான மெய்யான இந்துமதமே அரசியலுக்கு அடிப்படையாகவும், தலைமையாகவும், வழியாகவும், வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும், வழிப்பயனாகவும் இருக்க வேண்டும், இருக்க வேண்டும், இருக்க வேண்டும்'.**

# தேவதேவியின் சன்னிதான சித்திபூசை முறை பற்றிய விளக்கம்

அருள்மிகு வீரப்பூர் தங்காயி அம்மன் சன்னிதானம் சித்தரடியார் இரா.அண்ணுமலை அவர்கள் சமூகத்திற்கு குருதேவர், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறார் அவர்களின் ஆணைப்படி வரையும் மடல்.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் அருளே.

2) தங்களின் சித்தி பூசைக்கு குருதேவரின் ஒப்புதலும், வாழ்த்தும் வழங்கப்படுகிறது.

3) ஒரு மண்டலம் முடிந்தவுடன் கலசத் தேங்காயை உடைத்து பூசை செய்து தேங்காய் எப்படி இருக்கிறது? என்று தலைமைப் பீடத்திற்குத் தெரிவிக்கவும். இதுபோல் மூன்று மண்டலம் சித்தி பூசை செய்து ஒவ்வொரு மண்டலத்தின் முடிவிலும் கற்பூரம் காட்டி தேங்காய் உடைத்துப் பூசையை முடிக்க வேண்டும். சித்தி பூசை நாட்களில் தங்களின் மனநலம், உடல்நலம், அருளுலக அநுபவங்கள், இரவு கனவு முதலியவற்றை தினமும் ஒரு நோட்டில் எழுதி வாருங்கள். ஒவ்வொரு மண்டலத்தின் இறுதியிலும் தேங்காய் எப்படி இருக்கிறது என்பதையும் எழுதி வாருங்கள். இப்படிக் குறைந்தது 3 அல்லது 4 முறை சித்தி பூசை செய்து தங்கள் அநுபவங்களை

தலைமைப்பீடத்திற்கும், வீரமாகாளி சன்னிதானத்திற்கும் அனுப்பி வாருங்கள். அப்பொழுதுதான், தங்களின் வினை, ஆள்வினை, சூழ்வினை, விதி, இன்றைய தகுதி முதலியவற்றை எடைபோட முடியும். அதன்பின்தான் தங்களின் சத்தி, சித்தி நிலைகளைப் பற்றிக் கூற முடியும்.

4) தங்களுக்கு விரைவில் சத்தி சித்தி வேண்டுமென்றால் வாராவாரம் வியாழக்கிழமை தருகுலத்திற்கு கலசத்துடன் சென்று ஓர் இரவும் பகலும் தங்கிப் பூசை செய்தும், தருகுலப் பொறுப்பாளர் சீ.மணியிடம் உரையாடியும், கோப்புக்களைப் படித்தும் தத்துவ விளக்கம் பெற வேண்டும்; சன்னிதான உடையில் மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலியுடன் (48 தோகை கொண்டது) தருகுலத்திலும், தருகுல அலுவலகத்திலும் அமர்ந்து பூசைமொழிப் புத்தகத்தில் இருக்கும் அனைத்து வாசகங்களையும் படித்து அருளுலகத்திற்கு அறிமுகம் செய்து கொள்ள வேண்டும்.

<u>**குறிப்பு:-**</u>

இதேபோல் எந்த ஊருக்கு, எந்த இடத்திற்கு சென்றாலும் சன்னிதான உடை, கொடி, மயில்பீலி எடுத்துச் சென்று ஓய்வு கிடைக்கும்போது தனியிடத்தில் கோயிலில் சன்னிதான உடையணிந்து மயில்பீலி, மெய்ஞ்ஞானக்கொடி தாங்கி பூசைமொழி வாசகத்தை முழுவதும் படிக்க வேண்டும்.

5) நமது கொள்கை விளக்கப் புத்தகம் ஒன்று உங்களுக்கென்று வாங்கி; 1 வாரத்தில் குறைந்தது மூன்று முறை ஒரு வழிபாட்டு நிலையத்தில் (கோயிலில்) சன்னிதான உடையில் அமர்ந்து கோயிலில் உள்ள கருவறை மூலவரை அருட்சினை மந்திறம் கூறி, அருட்சினை செய்து; கொள்கை விளக்கப் புத்தகத்தில் உள்ளவற்றை ஆரம்பம் முதல் இறுதி வரை நிறுத்திப் படிக்க வேண்டும். பிறகு எந்த

ஊரில் எந்தக் கோயிலில் இருக்கிறீர்களோ அதன் பெயரைக் கூறி; உதாரணமாக, சேரநாட்டுக் கடந்தப்பட்டி மாரியம்மன் கோயில் கருவறை முன்:-

"சித்தரடியான் அண்ணுமலே ஆகிய நான் குருபாரம்பரிய மரபுப்படி முக்காலும் சத்தியமாக மேற்கூறிய கருத்துக்களே ஒப்புக் கொள்கிறேன், நம்புகிறேன். இக்கருத்துக்களின் மூலம் அருளாட்சிப் பணியில் ஈடுபட்டிருக்கும் குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், அருளாட்சி நாயகம், தமிழின ஆச்சாரியார், இந்துமத ஆச்சாறிய பீடம், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூறர் அவருடைய தலேமையின் கீழ் என்றென்றும் உண்மையோடும், பணிவோடும், கட்டுப்பாட்டோடும் செயல்படுவேன். நான் குருதேவரையும், குருவின் பதிலிகளேயும், வாரிசுகளேயும், குருவாணேகளேயும், குருவாணே பெற்றவர்களேயும் என் உயிரினும் மேலாகப் போற்றிச் செயல்படுவேன். இது முக்காலும் சத்தியம். எக்காரணம் பற்றியும் இச்சத்தியத்தை மறந்தோ, துறந்தோ, மறுத்தோ, வெறுத்தோ, மறைத்தோ, குறைத்தோ செயல்பட மாட்டேன். எனவே, தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் என்னே அருளுலகில் ஏற்று எனக்குரிய சத்தி சித்திகளே வழங்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். நான் பெறக் கூடிய அருளுலக பொருளுலகச் செல்வங்கள் அனேத்தையும் குருவின் திருவுளப்படியே செயல்படுத்துவேன் என்று குருபாரம்பரிய மரபுப்படி சத்தியம் செய்கின்றேன்.

ஓம் திருச்சிற்றம்பலம்."

என்று சத்தி அண்டத்து தேவதேவியின் சித்திபூசை பரிந்துரை விவரங்களைக் கூறிப் பூசையை நிறைவு செய்ய வேண்டும். இதேபோல் பலரும் கலசப்பூசை மூலம் சித்தி பெறுவதற்கு நீங்களே வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக இருந்திடல் வேண்டும். அதாவது, உங்களோடு குறைந்தது 3 அல்லது 5 பேர்கள் சேர்ந்து சித்தி பூசை செய்தால் அனைவருக்கும் சித்தி கிடைக்கும். இதேபோல் பலரையும் சித்தி பூசை செய்பவர்களாக உருவாக்குவதன் மூலம் உங்களுக்கு அருளுலகச் செல்வாக்கு கிடைக்கும். ஆரம்பத்தில் சன்னிதான உடை, மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி வாங்க முடியாதவர்கள் வெள்ளை உடையில் இருக்கலாம். வழிகாட்டுகின்றவர் கட்டாயமாக சன்னிதான உடையில் இருக்க வேண்டும். மற்றவர்கள் சித்தி பூசை 4 மண்டலம் செய்து முடிப்பதற்குள் தங்களுக்கு சன்னிதான உடை, மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

தாங்கள் தேர்வுக்குப் பயப்படாமல் அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல் என்று எண்ணி நெற்றியில் திருநீறு குங்குமம் பூசிக் கொண்டு படியுங்கள்.

**குருதேவருக்காக**

**ஓலைநாயகம்,**

**சித்தரடியான் சீனிவாசன்.**

**குறிப்பு:-**

குருதேவர் அரசபாரம்பரியம் எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், சந்தாஞ்ச்சாரியார்களின் வரலாறு எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில்; தங்கள் அஞ்சல் கண்டு, தொடர்ந்து பல நாட்கள் நள்ளிரவு

கண்விழித்து எழுதிய அஞ்சல் இது. தங்களுக்கு எழுதிய இவ்வஞ்சலின் மூலம் தேவதேவியின் சன்னிதான சித்திபூசை முறை பற்றிய விளக்கம் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. எனவே, **இவ்வஞ்சலுக்கு சில பேனா நகல்களும், பல கார்பன் நகல்களும் எடுத்து தலைமைப்பீடத்திற்கு அனுப்புக. அவசரம், அவசியம்**.

அன்பு

**தலைமைப் பணியாளர்களுள் ஒருவர்,**

**சித்தரடியார் சீனிவாசன்.**

**//உண்மை நகல்//**

**<u>நகல் நல்குபவர்:-</u>**

அருள்மிகு குருவின் பதிலி சீ.மணி, 18/8/87.

அருள்மிகு வேம்படிதாளம், காமகோடிப் பீடாதிபதி, பெரியவாள், மகேசுவர ஆச்சாரியார், கபாலீசுவரி சன்னிதானம் சித்தரடியான் சீ.மணி, 2/24 புதிய வீதி, வேம்படிதாளம்-637504, சேலம் மாவட்டம்.

**//மூலநகல்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

***"எல்லாக் கோயில்களும் அருளூற்றுக்களே",***
***"எல்லாக் கடவுள்களும் அருளாளர்களே",***
***"அனைத்து வகையான வழிபாடுகளும் அருளைப் பெறுவதற்கே",***
***"இம்மண்ணுலக மதங்களனைத்தும் பதினெண்சித்தர்களின் சீவநெறி என்னும் கனிமலர்ச் சோலையில் பூத்த மலர்களே, கனிந்த கனிகளே, ....."***
**- என்ற குருபாரம்பரிய வாசகங்களை விளங்கியும், விளக்கியும் செயல்பட்டால் போதும். இதுவே, அனைத்து வகையான நோய்நிலைகளையும் நீக்கி விடும்.**

# சித்தர்நெறி எனும் தத்துவம்

1) "இருளும் ஒளியும் இறைவனைப் புரிந்தார்க்கில்லையெனும் குருவாசகம் புரிந்து வாழக் குருதேவர் வருங்காலம் உதவும். தெரிந்தால் தெரிந்து, புரிந்தால் புரிந்து செயல்படுக."

***- கருவாசகம்.***

2) "பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பாற்பட்ட வாழ்வியல்களைப் புரிவதில்தான் கரு, குரு, தரு, திரு, உலக அருளாளர், அருவ, உருவ, அருவுருவத் தாத்தாக்கள் ஆத்தாக்கள் முதலியோரின் நிலைகள் விளங்கிடும்."

***- குருவாசகம்.***

3) "அகவாழ்வும், புறவாழ்வும் அள்ளித் தரும் அல்லலும், அவலமும், கேவலமும், ஏக்கமும், சீற்றமும் ... உருவாக்கும் ஆலயம்தான் தனிமனித சித்திக்கும், முத்திக்கும் வித்திடும்."

***- தருவாசகம்.***

4) "குருவழியாக அனைத்தும் திருவாக்கி முத்தி காண்பதே இறவாயாக்கைப் பெரியோனாகும் வழி."

***- திருவாசகம்.***

5) "தன்னையறிந்து தலைவனை யறிபவனும்; தலைவனை யறிந்து தன்னை யறிபவனும் முன்னைப் பழவினைகளில் உழலாமல் பின்னைப் பிறப்புக்களுக்கும் துணையாகும் பரம்பொருளாய் உருவாகிடுவான். அதற்குத் தன்னைக் கடவுளின் 'தாயாக, தாரமாக, தானீன்ற மகளாக, தானேற்ற தோழனாக, தனது சேவகனாக, தனது தொண்டனாக, தனது நண்பனாக' ... அறியாமல் ஆட்படுத்தும் பரிபக்குவம் பெறல் வேண்டும்."

***- குருபாரம்பரிய வாசகம்.***

**// 28/04/1984இல் குருதேவர் எழுதிய ஓர் அஞ்சலில் இருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள். //**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**

**- குருபாரம்பரிய வாசகம்.**








தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (கி.பி.785 – 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Anaathi Sankaraachaariyaar Peedam Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr. Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell:09972130609
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://books.gurudevar.org
https://gurudevar.in https://gurudevar.org
https://induism.org Email: indhuism@gmail.com